பக்கங்கள் 06 விலை ரூபா 5-00

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM. இதழ்

University of Jaffna ... RECEIVED ... Periodicals Division ... Library

## இல்வாழ்க்கை

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. 41

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 42

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல்தலை. 43

பழி யஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். 44

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 45

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,
இல 111, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

தீபம் : 44 ஏப்ரில் - 1995 ஒளி : 13

# கூட்டுறவு கொள்கைகளின் கீழ் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்

— ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா

(திருமலை)

"கூட்டுறவு இயக்கத்தில் மக்கள் எதுவித கட்டுப்பாடுமின்றி தாமாக விரும்பி இணைந்து, கூட்டுறவுக் கொள்கைகள், தத்துவங்களைக்கடைப்பிடித்து, மக்களின்தேவைகளை அறிந்து அவர்களது எதிர்பார்ப்புக்களை நிவர்த்திசெய்யும் வகையில் ஜனநாயக முறைப்படி உபவிதிகளுக்கு அமைவாக தேர்தல்களை நடாத்தி மக்கள் பிரதிநிதிகளிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதை உறுதிசெய்ய வேண்டும்."

இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாண பிரதேச செயலாளர்கள், பிரதிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களுக்கான 3-நாள் கருத்தரங்கினை நிறைவுசெய்து உரையாற்றிய வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா குறிப்பிட்டார்.

திருமலை ஆளணிப் பயிற்சி நிலைய ஏற்பாட்டின்கீழ், திருமலை விவசாய விஸ்தரிப்பு கல்லூரியில் நடைபெற்ற இக் கருத்தரங்கை வடகிழக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளர் ஜனாப் எம். ஏ. ஸி. மொகைதீன் ஆரம்பித்து வைத்தார்.

ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அங்குதொடர்ந்து பேசுகையில்;

கூட்டுறவுச் சங்கங்கள் இன்று கூட்டுறவுக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில் தவறிவிட்டன. முக்கியமான கூட்டுறவுக் கொள்கைகளான பங்குமீதான வட்டி, இலாபப்பங்கீடுஎன்பன உறுப்பினர்களுக்கு வழங்கப்படாமையினால் கூட்டுறவுச் சங்கங்களை விட்டு மக்கள் சற்றுவிலகி இருக்கிறார்கள். உறுப்பினர்கள் மத்தியில் மீண்டும் இவற்றை அறிமுகப்படுத்தி கூட்டுறவு இயக்கத்தில் மக்கள் தாமாக விரும்பி பங்குபற்றக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் கூட்டுறவுச்சங்கங்களில் இருந்து மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகமாகவுள்ளது. பலவழிகளிலும் மக்கள் இன்று பாதிக்கப்பட்டுள்ளார்கள். மக்கள் இலகுவாகவும், வசதியாகவும் நுகர்ச்சிப்பொருட்களைபெறக் கூடிய வகையில் சங்க நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது, சங்கங்களின் செயற்பாடுகள் மக்கள் சேவையில் போதுமானதாகஇல்லை. விவசாயத்துறை சேவைகளை கூட்டுறவுச் சங்கங்கள் முற்றாக கைவிட்டு விட்டன. எனவே விவசாயத்துறையில் சங்கங்கள் கூடிய கவனமெடுக்க வேண்டும்.

ஜனநாயக முறைப்படி உரிய காலத்தில் உபவிதிகளுக்கு அமைவாக தேர்தல்களை நடாத்தி மக்கள் பிரதி நிதிகளிடம் நிர்வாகத்தை வழங்குவதை உறுதிசெய்வதன்மூலம் கூட்டுறவில் மக்களை முழுமையாக ஈடுபாடுகொள்ளச் செய்ய முடியுமென்று கூறினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## புதுவருட வாழ்த்துக்கள்

கூட்டுறவாளர்கள், வாசகர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள், அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## கூட். அலுவலர் அதிகரிப்பு?

வடக்குக் கிழக்குப் பகுதியில் நிலவும் கூட்டுறவு அலுவலர்களின் ஆளணித்திரட்டில் உள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கூட்டுறவு அ. உ. ஆணையாளர்கள், மாவட்ட கூட்டுறவு அலுவலர்கள், 1-ம் தர கூட்டுறவு அலுவலர்கள், 2-ம் தர கூட்டுறவு அலுவலர்கள் என எல்லாமாக 467 பேர்கள் ஆளணித்திரட்டுக்குஅமைவாக ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும், இதில் 200 பேர்கள் வரை யாழ். மாவட்டத்தில் இடம்பெறுவார்கள் என்றும் அறியப்படுகிறது.

## கூட். பயிற்சி விசேட பரீட்சை

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியினால் 1990ம் ஆண்டுக்கு முன் நடாத்தப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்டதர, சாதாரணதர, உயர்தரம் பயின்று இறுதிப்பரீட்சையில் தானசித்தி அடைந்தோர்க்கும சித்தி அடையாதோர்க்குமாக விசேடபரீட்சை ஒன்று யூன் மாதம் யாழ். கூ. பயிற்சிக்கல்லூரியில்நடைபெறவுள்ளது என அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார்

திருகோணமலை கூட்டுறவுக்கல்லூரியினால் யாழ்மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியில் நடாத்தப்படவுள்ள இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி மே மாதம் 10ம் திகதி எனவும், இப்பரீட்சையே இப் பாடத்திட்டங்களுக்கான இறுதிப் பரீட்சை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு நவீன முகாமைத்துவம் வேண்டும்!

"கூட்டுறவு இயக்கம் பிரதேச ரீதியாக இன்று முக்கியத்துவம்பெற்று வருகிறது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அரச, தனிதுறைகளிலும் பார்க்க கூட்டுறவுத்துறைதான் முக்கியத்துவம்பெற்று விளங்குகிறது. எனவே நவீன முகாமைத்துவத்தின் கீழேயே கூட்டுறவு இயக்கம் வளர்ச்சிஅடைய வேண்டும்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெற்ற நவீன ஆளணிக் கொள்கை தொடர்பில் பரீட்சார்ந்த வேலைக்களத்தை தொடக்கி வைத்துப் பேசிய யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் வேலைத்தளம் சர்வதேச தொழில் ஸ்தாபனமும் அகில உலக கூட்டுறவு இணைப்பு நிறுவனமும் இணைந்து நடாத்தியது.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில், கூட்டுறவு நிறுவனங்களை நிர்வகிக்க முகாமைத்திறனும், நிதிநிர்வாகத்தை கையாளும் திறனும் கொள்வனவு, விற்பனவிலும் திறன் வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். இத்தகைய முகாமைத்திறனை வளர்த்தெடுக்க இது தொடர்பான பல்வேறு வேலைத்தளங்கள் இடம்பெறுவது முக்கியமாகும் என்று கூறினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## உற்பத்தியின் தரம் அதிகரிக்கப்பட வேண்டும்

"பனை, தென்னை வள அபிவருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பனம் பொருள் உற்பத்தி முயற்சிகள் குறைவாக இருந்த போதும், தற்போது உற்பத்தி முயற்சிகள் நவீன மயப்படுத்தப்பட்டு பல உற்பத்திப் பேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்"

இவ்வாறு, கோண்டாவில் பனை, தெ. வள அபி. கூட். சங்கத்தின் பனம் பொருள் உற்பத்திப் பேட்டையை மருதனார்மடத்தில் திறந்து வைத்துப் பேசிய கூட்டுறவு அ. உ. ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் கூறினார்.

சங்கத்தலைவர் திரு. வ. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. தி. சபாரத்தினம் தொடர்ந்து பேசுகையில்;

இத்தகைய உற்பத்திப் பேட்டைகளை உருவாக்கி இவற்றை இயந்திர மயப்படுத்தி உற்பத்

(6-ம் பக்கம் பார்க்க)

### ஆணைக்குழு நியமனம்

பதினேழு வருடங்களுக்கு மேலாக இருந்து வரும் கூட்டுறவு ஆணைககுழுச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கான குழு வொன்றை அரசு நியமித்துள்ளது.

இக்குழுவில் இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனத்தலைவர் திரு அசோகா சுபசிங்கா கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு எஸ். பி. திவாரத்தின ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

### ஆணையாளர் கடிதம்

கூட்டுறவுத்துறை சார்ந்த புத்தகங்கள் சஞ்சிகைகள் போன்றவற்றை வடகிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்குமாறுபுதுடில்லியிலுள்ள தென்கிழக்காசிய கூட்டுறவு நிறுவனப்பணிப்பாளர் திரு. சர்மாவுக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா கடித மூலம் கேட்டுள்ளார்.

## வட.. கிழக்கு மாகாண கூ. அ. ஆணையாளர் யாழ். விஜயம்

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் மாகாண கல்வி அமைச்சின் பதில் செயலாளருமான திரு. சுந்தரம் டிவகலாலா உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொண்டு மே மாத முற்பகுதியில் வடபகுதிக்கு வருகை தரவுள்ளார்.

வடபகுதி கூட்டுறவாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பாரிய பிரச்சனைகள் அவர்களது தேவைகள், குறைபாடுகள் என்பவற்றை ஆராய்ந்து அவைகளை நிவர்த்திசெய்யும் நோக்குடன் நேரிலும்; கூட்டுறவுநிறுவனங்களின் நிர்வாகிகளிடமும், சம்பந்தப்பட்ட அரச திணைக்கள அதிகாரிகளுடனும் கலந்துரையாடவுள்ளார்.

திரு. சு. டிவகலாலா வடக்கு கிழக்கு மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகப் பதவி ஏற்றபின் முதன் முறையாக வடபகுதி வரவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலில் யாழ்ப்பாணம் வரவுள்ள திரு. சுந்தரம் டிவகலாலா பின்னர் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய வன்னி மாவட்டங்களுக்குச் சென்று மீண்டும் யாழ்ப்பாணம் வந்தே திருமலை செல்லவுள்ளார்.

திரு. சுந்தரம் டிவகலாலா வட-கிழக்கு மாகாணசபையின்

(6-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிந்தனைச்சுடர்

கூட்டுறவு இயக்கம் போன்ற மக்கள்முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் நல்ல பண்புள்ளம் படைத்த வர்களாயிருத்தல் வேண்டும்.

- அறிஞன்

## ஐக்கிய எண்ணர்

## 44 - வது ஆண்டை நோக்கி ......

" ஐக்கிய தீபம் " இவ் வருடம் ஏப்பிரல் மாதம் தனது 44 வது அகவையில் காலடி எடுத்து வைக்கின்றது.

கூட்டுறவாளர்கள், வாசகர்கள், மற்றும் அனுதாபிகளின் வாழ்த்துக்களின் மத்தியில் அதுபேருவகைகொள்கிறது.

எத்தனையோ இன்னல்களின் மத்தியிலும், பத்திரிகா தர்மத்தின் வழிநின்று தனது எண்ணங்களை கூட்டுறவாளர்களின் குரலாக சனனாயகத்தின் வழிநின்று ஒலித்துவந்துள்ளது.

கூட்டுறவுத் தத்துவங்களுக்கும், கொள்கைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் ஏற்ப ஐக்கிய தீபம் தனது பணியை வெற்றிகரமாக ஆற்றிவருகிறது.

கடந்த காலங்களில் கூட்டுறவாளர்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும், அவற்றோடுசம்பந்தப்பட்ட சகலதரப்பட்டவர்களுக்கும் ஏற்படுகின்ற பிரச்னைகளை அணுகி உடனுக்குடன் சுட்டிக்காட்டி வந்ததுடன் மட்டுமல்லாமல் அவற்றுக்குரிய நிவாரணங்களை சம்பந்தப்பட்டவர்கள்மூலமாகபெற வழிசெய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சம்.

" உலகில் கூட்டுறவில் உயர்ந்ததெம் தமிழீழம் " என்ற எமது கூட்டுறவு முன்னோடிகளின் கூற்றுக்கிணங்க கூட்டுறவின் ஒளியான ஐக்கியதீபம், கூட்டுறவாளர் மத்தயில் புதிய சிந்தனைகளை உருவாக்கி பலகலான சுபீட்சமான, அமைதியான வாழ்க்கைக்கு வழிகாட்டும என்பது திண்ணம்.

பத்திரிகை உலகில், தமிழீழத்தைப் பொறுத்தவரையில் 44 ஆண்டுகளாக ஒரு பத்திரிகை - அதுவும் கூட்டுறவாளர்களினால் வெளியிடப்படுகின்ற தென்றால் உலகில் கூட்டுறவு அமைப்பால சாதிகக முடியாதது ஒன்றுமில்லை எனலாம்.

சாதி, சமய, இன அரசியல் பேதங்களுக்கு அப்பாற்பட்டவகையில் நவீன சிந்தனைகளுடன் கூட்டுறவு இயககத்தை கட்டி எழுப்பி " ஒன்றே குலம் ஒருவனே தேவன் " " கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற கோட்பாடுகளுடன் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, என்பதனை நிதர்சனமாக்கி வரும் ஐக்கிய தீபத்தின் வளர்ச்சிககு பங்காளிகளாக மிளிரும் வாசகர்களது ஆதரவு மட்டுமல்லாமல் அனைத்து மக்களதும், கூட்டுறவாளர்களதும் ஆதரவையும், ஆசியையும் வேண்டிநிற்கிறோம்.

" கூட்டுறவே நாட்டுயர்வு "

# கூட்டுறவு சேவையால்தீவக மக்களை கவர்ந்தபெரியார்



வேலணைப்பகுதியில் " பண்டிதர் ஐயா " என்றால் அம்பலவாணர் பொன்னுத்துரை அவர்களையே குறிக்கும். இளம் வயது முதல் அக்கிராம மக்களின் நலப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு தீவக மக்கள் எல்லோர் மனத்தையும் கவர்ந்தவராக விளங்கினார்.

வள்ளுவர் கண்ட அன்புடமை, அருளுடமை, பண்புடமை, எல்லாவற்றுக்கும் இலக்கணமாக திகழ்ந்தவர். தமர், பிறர் பெரியோர், சிறியோர், கற்றார், கல்லாதார் என்ற வேற்றுமைகளைப் பாராது வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த சிறந்த சிந்தனையாளர்.

ஆசிரியராக இருபத்திரெண்டு ஆண்டுகளும், அதிபராக 20 ஆண்டுகளும் நீண்டகாலம் கல்விச்சேவை செய்த பெருமையும் இவரையே சாரும்.

வேலணை பெங்குளம் முத்துமாரி அம்மன் பரிபாலன சபைத்தலைவர் தீவுப்பகுதி ஆசிரிய சங்கத்தலைவர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், கிராமமுன்னேற்றச் சங்கத்தலைவர் ஐக்கியநாணய சங்கத் தலைவர், இணக்க சபைத்தலைவர், பண்ணை ஆயப் போக்குவரத்துச் சபை உறுப்பினர் என கிராமத்தின் உயர்வுக்குஅக்கிராமமக்களால்

பொ. மாசிலாமணி
தலைவர்,
வேலணை ப. நோ. கூ. சங்கம்

அமைக்கப்படும் சபைகளில் இவர் வகித்துவந்த பதவியே, இவரது சமூகப்பணிகளை துலாம்பரமாக காட்டிநிற்கின்றன. அன்னார் தீவகத்தில் " கூட்டுறவு " என்ற விருட்சத்தின் வித்துக்களை விதைப்பதில் ஈடுபட்ட பழம்பெரும் கூட்டுறவாளர்களில் ஒருவராவார், தீவகத்தின் கூட்டுறவு வரலாற்றில் பல தடயங்களை பதிந்து சிறந்த சேவையாற்றியமைக்கான வரலாறுகள் இன்றுமுண்டு.

அவர் வேலணை மத்திய ஐக்கிய பண்டகசாலை, காரைநகர், லைடன், மண்டைதீவு, ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம், வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ( பழையது ) வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ( புதியது ) ஆகியவற்றின் தலைவராக சிறப்பாக பணியாற்றினார்.

காரைநகர், லைடன் மண்டைதீவு, கூட்டுறவுச் சங்கச் சமாசம், தீவுப்பகுதி விளை பொருட் சங்கத்தின் செயலாளராகவும், பண்ணைப்போக்குவரத்து ஐக்கிய சங்கம், தீவுப்பகுதி கூட்டுறவுப் பண்டகசாலை சமாசம் ஊர்காவற்துறை வடபகுதி கூட்டுறவுச் சமாசம் ஆகியவற்றின் நிர்வாக சபை உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். அப்பேர்ப்பட்ட பெருந்தகையாளரை, நாம் நினைவு கூறுவது சாலப் பொருத்தமாகும்.

### விசேட பொதுக்கூட்டம்

ஊர்காவற்றுறை பல நோ. கூ. சங்கத்தின் விசேடபொதுக் கூட்டமொன்று 14 - 5 95 ஞாயிற்றுக்கிழமை காலை பி. எஸ். சேவிஸ் நிலையத்தில் உள்ள சங்கத் தலைமைக்காரியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

### சகாய விலையில் விற்பனை

கால்நடை வளர்ப்போர் நன்மை கருதி மானிப்பாய் பல நோ. கூ. சங்கம் யாழ். மாவட்ட விவசாய சமாசத்திடம், கால்நடைத் தீவனம், கோழித்தீன் என்பவற்றைப் பெற்று சகாயவிலையில் தனது விற்பனைக் கிளைகள் மூலம் விற்பனை செய்து வருகிறது.

# கூட்டுறவுச் சங்கங்களின் இறுதிஇருப்பைக்கணிப்பிடல்

கூட்டுறவுச் சங்கங்கள் மாதாந்தச் செயற்பாட்டு அறிக்கைகள் ( மாதாந்தக் கணக்கு அறிக்கைகள் ) தயாரிக்கும்போது விற்கப்படாது எஞ்சியிருக்கும் பொருள் இருப்பைக் கணக்கிடுவது அவசியமாகின்றது. சில சங்கங்கள் மேற்படி இறுதிப் பொருள் இருப்பைக் கணிப்பிடும் பொழுது கொள்வனவுச் சிட்டைப் பெறுமதியிலேயே கணிப்பிடுவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இப்படிக் கொள்வனவுச் சிட்டைப் பெறுமதியில் கணிப்பிடுதல் சங்கத்தின் கணக்கறிக்கைகளில் தவறுகளை ஏற்படுத்தும். அதாவது இலாப நட்டம் பாதிக்கப்படும்.

ஆகவே இறுதிப் பொருள் இருப்பினைக் கணிப்பிடும் பொழுது கொள்வனவுச் சிட்டைப் பெறுமதியுடன் கொள்வனவுச் செலவீனத்தினையும் சேர்த்துக்கணிப்பிடுதலேசாலச் சிறந்ததாகும். அதுவே சரியாதாகவும் அமையும்.

டது எனக்கொண்டால் கொள்வனவுச் செலவு அந்தமாதமே வியாபாரக் கணக்கிற்குக் கொண்டு செல்லப்படுகின்றது. ஆனால் பொருட்களோ. அந்த மாதம்இறுதி இருப்பாக கில் காட்டப்பட்டு அடுத்த மாதமே விற்பனை செய்யப்படுகின்றது.

டங்குனி மாதம் இறுதி இருப்பில் கொள்வனவுச் சிட்டைப் 500,000-/ என இறுதி இருப்பில் சேர்க்கப்பட்டால் கொள்வனவுச் செலவாகக் காட்டப்பட்ட 110,000 - அந்த மாதத்தில் நட்டமாகக் காட்டும். அல்லது உரிய இலாபத்தைக் குறைத்துக் காட்டும். அடுத்த மாதம் இப்பொருட்கள் 620,000/- விற்கு விற்கப்படும் பொழுதுஅந்தமாதம்120000/- வை இலாபமாகக் காட்டும். ஆகவே இந்நடவடிக்கை முற்றிலும் தவறான ஒன்றாகும்.

பங்குனி மாதத்தில் பொருள் இருப்புக் கணிப்பிடும் பொழுது அது 610,000/- எனப் கணிப்பிடப்பட்டுக் காட்டப்படுமா

## பொ. சண்முகசுந்தரம்

அதிபர், கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

கொள்வனவுச் செலவீனம் அதிகரித்துவரும் இக்காலத்தில் கொள்வனவுச் செலவீனத்தைத் தவிர்த்து மாதாந்தக் கணக்கறிக்கைகள் தயாரித்தால் அது கொள்வனவுச் செலவீனம கணக்குகளுக்கு கொண்டு வந்த காலததில் நட்டத்தையும் தொடர்ந்து வரும் மாதத்தில் இலாபத்தினையும் காட்டும். இது கணக்கியல் கோட்பாட்டிற்கு முரணானதாகும்.

தற்போழுது யாழ். மாவட்டத்திற்கு பொருட்களைக் கொண்டுவரும் பொழுது கொள்வனவுச் செலவீனம பெரும்அளவு ஏற்படுகின்றது ஆகவே மாதாந்த இலாப, நட்ட வித்தியாசமும் பாரிய அளவில் ஏற்படும். உதாரணமாக,

27 - 3 - 95 அன்று கொழும்பில் இருந்து 500,000 பெறுமதியான பொருள் யாழ்ப்பாணத்தைவந்தடைந்துஇதற்கு கொள்வனவுச் செலவாக கிடடத்தட்ட 110,000/- ஏற்பட்

னால் அந்த மாதத்தில் மேலதிக நட்டம் ஏற்படமாட்டாது. அதேபோல அடுத்த மாதமும் அது 620,000/- விற்கு விற்பனை செய்யப்படும் பொழுது உண்மையான இலாபமாகிய 10,000/- வையே இலாபமாகக் காட்டும். இதுவே சரியானதாக அமையும.

ஆகவே இறுதி இருப்புக்கள் கணிப்பிடும் பொழுது கொள்வனவுச் சிட்டைப் பெறுமதியுடன் அப்பொருட்களை வாங்குவதற்கு ஏற்பட்ட கொள்வனவுச் செலவீனத்தையும் சேர்த்துக் கணிப்பிடலே சரியான பெறுபேற்றை வெளிக்கொணரக் கூடியதாக அமையும்.

### சட்டத்தில் திருத்தம்

கூட்டுறவுப்பணியாளர் கல்வி, அவர்களது சேம நலன்களையும் பணியாளர்களுக்கு நவீன ஊக்குவித்தல் நடவடிக்கைகளை அடிப்படையாக கொண்டு ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கிராம மக்கள் மத்தியில் கூட்டுறவை வளர்த்தவர்

" கூட்டுறவே நாட்டுயர்வு " என்னும் முதுமொழிக்கிணங்க அதன் பலாபலன்களை மக்கள் அனுபவிக்க வேண்டுமென்ற நோக்குடன், கூட்டுறவு பற்றிய கருத்துக்களை மக்கள் மத்தியில் எடுத்துக்கூறி கூட்டுறவு இயக்கத்தை கிராமமக்கள் மத்தியில் கட்டிஎழுப்பியவர் அமரர் கணபதிப்பிள்ளை கந்தசாமி.



பண்டத்தரிப்பு பிரான்பற்று கிராமத்தில் பிறந்து அக்கிராம வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டமையால் பண்டத்தரிப்புபரிஷ் பல நோ. கூ. சங்க பிரான்பற்று கிளையின் செயலாளராக மக்களால் தெரிவுசெய்யபட்டார். வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவந்த பிரான்பற்று கிளைக்கு சொந்தமான ஒரு கட்டிடம அமைககும் முயற்சியில் ஈடுபட்ட இவர் நாட்டில்ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக அது கைகூடாமல் போய்விட்டது.

பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோ. கூ. சங்கத்தின் தலைவராக 02-12-1989ல் இருந்து 17-11-1991 வரை பொறுப்பேற்று நடத்தினார். போர்க்கால சூழ்நிலையில் பாரிய பொறுப்பை ஏற்று எதுவித பிரச்சனையுமில்லாது திறம்பட நடாத்திய பெருமைக்குரியவரானார்.

சங்க முன்னேற்றத்தில் மாத்திரமல்ல சமுதாய முன்னேற்றத்திலும், பிரான்பற்றுகிராம முன்னேற்றத்திலும் அக்கறையுடன் உழைத்தார். 1969 ல் உபதபாலகம் ஒன்றை ஆரம்பித்து அதன் அதிபராகக் கடமையேற்று இறுதிவரை சிறப்பாக நடாத்திவந்தார். தனது இனிய சுபாவத்தினால் எல்லோராலும் "போஸ்ற் மாஸ்ரர் " என அன்பாக அழைக்கப்பட்டார். கிராமமுன்னேற்றத்தில் தான் நினைத்த காரியத்தை செயலில் காட்டிய செயல் வீரனாகவும் திகழ்ந்துள்ளார்.

பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராக இருந்து விளாவெளி மயான வீதியையும், வைத்தியசாலை வீதி ஆகிய வீதிகளைப் புனரமைப்புச் செய்ததுடன், பாலர்களின் முன்னேற்றங்கருதி பாலர் பாடசாலையொன்றை நிறுவினார். கலைமகள் பாடசாலையின் பெற்றார் ஆசிரியர் சங்கத்தை நிறுவி பாடசாலையின் வளர்ச்சிக்கும், அதன் உயர்ச்சிக்கும் தன்னாலான உதவிகளைச் செய்த பெரியாரை பண்டத்தரிப்பு பரிஷ் மக்களை நினைவுகூர வைத்துள்ளது.

க. ரவிச்சந்திரன்

# மத்திய செயலகம் திறப்பு

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் மத்திய தொடர்புச் செயலகம் ஒன்றை அண்மையில் தமிழீழ நிர்வாக சேவையின் கூட்டுறவுப பொறுப்பாளர் திரு. க. பரணி திறந்து வைத்தார்.

கிளிநொச்சி மக்கள் வங்கிச்கு அருகாமையில் திறந்துவைககப்பட்ட இக்கட்டிடத்தின் பெயர் பலகையை கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. இளஞ்சேரன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

கூட்டுறவு அ. உதவி ஆணையாளர் (பனை தென்னை வள) திரு. தி. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில், திருகோணமலை கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. எஸ். அருளானந்தம் வடமாகாண ப. தெ. வ. கூ. சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் திரு கி. சிவநேசன் உட்பட கூட்டுறவாளர் பலரும் கலந்து கொண்டனர்.

### இலாபப் பங்கீடு

பண்டத்தரிப்பு பரிஷ் பல நோ. கூ. 1992/93 காலப்பகுதிக்கான இலாபப் பங்கீடு பகிர பின்வருமாறு தீர்மானித்துள்ளது.

பங்குமீது வட்டி, பணியாளர் விருபபுக்கொண்ட, விவசாயஅபிவிருத்தி நிதி, பொது நலநிதி ஆகியவற்றில் பணியாளர் விருப்புக்கொண்ட புது வருடத்தை முன்னிட்டு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

பொதுநலநிதியில் இருந்து சங்கத்தில் அங்கத்துவம்பெற்ற பெற்றோரின் 5-ம வகுப்பு புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களுக்கும்க. பொ. த சாதாரண பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கும்- புலமைப் பரிசில் வழங்கவும் சங்கம் ஆயத்தம் செய்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறப்போர் அன்னை வீரகாவியமானார்

அகிம்சைப் போரின் காவிய நாயகி அன்னை பூபதியின் 7-ம் ஆண்டு நினைவை ஒட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

" தமிழ் ஈழம் அமைதியை விரும்பும் நாடு. நாம் இழந்துவிட்ட இறைமையை மீட்டெடுக்க போராடுகிறோம். நாம் எங்கள் விடுதலைக்காகபோராடுகின்றோம். எங்களை அழிக்க நீயார்? காந்திபிறந்த மணணில் இருந்து இங்குவந்து எம்மைக் கொடுமைப் படுத்தவா? என்று வீரமுழக்கம் செய்தவள் தான் அன்னை பூபதி. "

" முடியுமானால் நான் அறப்போரில் குதிக்கின்றேன். எம் விடிவுக்காக அறப்போர் தொடுக்கின்றேன். இந்த மண்ணோடு மண்ணாக என் உயிர் போனாலும் நாளை மலரும் தமிழ்ஈழத்துக்காக என்னை அர்ப்பணிக்கின்றேன் " என அந்த தாயுள்ளம் கூவிய விடுதலைக்கனல் ஓய்ந்து ஏழு வருடங்கள். யாருமே வாய்திறந்து பேசாத நேரத்தில் அன்னை பூபதி எங்கள் அமைதியை மதியாமல் எவரேனும் எம் விடுதலை உணர்வை தடுக்க நினைத்தால் அதில் எவருமே வெற்றி கொள்ள முடியாது

செல்வி அ. திலகவதி

என மட்டக்களப்பில் கோஷமிட்டாள். ஆக்ரோரசமான இன உணர்வைக் கண்ட இந்தியப்படை கூனிக்குறுகிநின்றது. கையிலே ஆயுதமெதுவுமின்றி, மன உறுதியை வெளிக்காட்ட மட்டக்களப்பு மாமாங்க பிள்ளையார் கோவில் முன்றலில் இக்கொடுமைக்கு விடிவுதாராயோ விநாயகனே என வீர முழக்கமிட்டு உண்ணா விரதமிருந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன்.

அந்தத்தாய் இன்றிருந்தால் எம் மறவர் கூட்டம் இந்திய அமைதிப்படையை விரட்டியடித்த காட்சியை கண்ணாரக் கண்டு மனம் மகிழ்ந்திருப்பார் என்ன செய்வோம் அந்தத் தாயின் தியாகத்தை எம்மால் மறக்கமுடியுமா? மாதக்கணக்கில் உண்ணா நோன்பிருந்து அறப்போரின் உன்னதத்தை, உலகத்துக்கு எடுத்துக் கூறிய அந்தத் தியாகியை எவரும் இலகுவில் மறந்துவிடமுடியது.

அந்த அன்னையின் வீர தியாகம் எம் பெண்களுக்கும் உருவாகும் நாள் ஈழ விடுதலைப்போரில் தமிழ் ஈழத்தின் மலர்ச்சி நாள். காலம் கடந்தாலும் அன்னை பூபதியின் தியாக உணர்வு வரலாறாக பரிணமிக்கும்.

## தியாகத்தாய் பூபதியே !

*மனம் வாக்குக் காயமென்னும் திரிகரணம்*
*இனம் வாழ இன்னுயிரை அகிம்சைஎன்னும்*
*தளம் மேவு சத்தியப்போர் புரிந்துதந்தாள்*
*மனம் மேவு தியாகத்தாய் பூபதியே.* — கவி

# பல நோ. கூ. சங்க இயக்குநர்கள் கிளைக்குழுதலைவர்கள், அங்கத்தவர் வாழ்க்கைப்படி கொடுப்பனவுகள்.

*பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர்களுக்கும், கிளைக் குழுக்களின் தலைவர்கள் / அங்கத்தவர்களுக்கும வாழ்க்கைப்படி வழங்குதல் —*

சம்மந்தமான 95 / 1 இல. சுற்றுநிருபம் ஒன்று சகல பல நோ. கூ. சங்கத் தலைவர்களுக்கும்கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் எஸ். பி. திவாரத்னவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

1979 ஒக்டோபர் 15 - ஆம் திகதி என்னால் வெளியிடப்பட்ட 12 / 11 / 79 / 78 என்ற சுற்றுநிருபத்தின் 4-ம், 5-ஆம் பிரிவுகள் சம்பந்தமாக செய்யப்பட்ட எல்லா திருத்தங்களும் இத்தால் இரத்துச்செய்யப்படுவதுடன் 1995-4-1ஆம் திகதியிலிருந்து செயற்படுகின்றவாறு பின்வரும் திருத்தங்கள் அதற்கு பதிலாக இடப்படுகின்றது.

*04. இயக்குனர்களுக்கு வாழ்க்கைப்படிகொடுப்பனவு. (தங்குவதற்கும், வாழ்க்கைச் செலவும்)*

4. 1. இயக்குனர்களுக்கு பிரயாணச் செலவுகளுக்கு மேலதிகமாக தங்குவதற்காகவும்வாழ்க்கைச் செலவுக்காகவும் பின்வரும் உச்ச எல்லைகளுக்குக்கீழ் வாழ்கைப் படி கொடுப்பனவுகளைப் பெறமுடியும்.

4. 2. சங்க அதிகாரப் பரப்புக்குள் சங்கக் கடமையின்பொருட்டு 6மணித்தியாலத்திற்குக் குறையாத காலப்பகுதியொன்றில் ஈடுபடுவதற்காக ரூபா 50/-க்கு மேற்படாத கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

4. 3. சங்க அதிகாரப்பரப்பை விட்டு ஆயினும்நிர்வாக மாவட்டத்திற்குள்சங்கக் கடமையின் பொருட்டு ஈடுபடும் 6-00 மணித்தியாலத்திற்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்காக ரூபா 75/- வாழ்கைப்படி கொடுப்பன வொன்றையும் 12 மணித்தியாலத்திற்கு மேற்ப்படும் சந்தர்ப்பங்களில் ரூபா 100/-என்றவாழ்க்கைப் படியொன்றையும்பெற்றுக்கொள்ளமுடியும்.

4. 4. நிர்வாக மாவட்டத்தை விட்டு சங்கக் கடமையின்பொருட்டு 6 மணித்தியாலத்திற்குக் குறையாத கால எல்லையில் ஈடுபடுவதற்காக ரூபா 100/- வாழ்க்கைப் படி கொடுப்பனவொன்றையும் 12 மணித்தியாலத்திற்கு மேலான காலப் பகுதியொன்றிற்காக ரூபா 150/- வாழ்க்கைப்படியொன்றையும் பெற்றுக்கொள்ள முடியும்.

*05. கிளைச் செயற்குழு உறுப்பினர்களுக்கு பிரயாணப்படியும், வாழ்க்கைப்படி கொடுப்பனவும் வழங்கல்.*

5. 1. கிளைச் செயற்குழு தலைவர்கள் / உறுப்பினர் / பொதுச்சபை பிரதிநிதிகள் சங்கத்தின் பொதுச்சபை கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக 6 மணித்தியாலத்திற்கு குறையாத கால எல்லைக்கு ரூபா 100/- வாழ்க்கைப்படிகொடுப்பனவு ஒன்றையும் பொதுப்போக்குவரத்து கட்டணங்களையும் பெற்றுக்கொள்முடியும்.

5. 2. இயக்குனர் சபையின் பூரண அனுமதியுடன் சங்கத்தின்கடமைகளில் ஈடுபடுவதற்காக கிளைச் செயற்குழுக்களின் தலைவர்கள்/ உறுப்பினர்கள்/பொதுச்சபை பிரதிநிதிகள் அவ்வாறு ஈடுபடும் 6மணித்தியாலதிற்கு குறையாத கால எல்லைக்காக ரூபா 50 /- க்கு மேற்படாதவாழ்க்கைப் படிக் கொடுப்பனவு ஒன்றையும் பொதுப் போக்குவரத்து கட்டணங்களையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

5. 3. கிளைச் செயற்குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக கிளைச் செயற்குழு தலைவர்கள் / உறுப்பினர்கள் 6 மணித்தியாலத்திற்குக் குறையாத கால எல்லைக்காக ரூபா 25/- விகிதம் மாதத்திற்கு ரூபா 50/- என்ற உச்ச எல்லைக்குகீழ் வாழ்க்கைப்படி கொடுப்பனவொன்றைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

# துணைவிதி 22 : கிளைக்குழுக்கள்

1) உபவிதி 8ன்படி நிறுவப்பட்ட ஒவ்வொரு கிளைக்கும் அக்கிளையில் வாக்காளர் பதிவேட்டில் பெயர் காணப்படும் உறுப்பினர்களால் உபவிதி 23க்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட ஒன்பது உறுப்பினர் கொண்ட ஒரு கிளைக்குழு ஒன்று இருத்தல்வேண்டும். ஆனால் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் ஆகக் குறைந்தது இருவராவது 13 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தற்போது பதவியிலுள்ள கிளைக்குழு ஒன்றில் வயது18-35க்கும் இடைப்பட்டவர்கள் இருவராவது இல்லாதவிடத்து தற்போதைய கிளைக்குழுக்களில் ஏற்படும் வெற்றிடங்கள் இத்தகையவர்களைக் கொண்டு நிரப்பப்படல் வேண்டும்.

இதன்கீழ் குறிப்பிடப்படும் எந்த ஓர் உறுப்பினரும் கிளைக குழுலிற்கு தெரிவு செய்யப்படலாகாது,

அ) 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்.

ஆ) உடன் முன்சென்ற 3ஆண்டுகளுக்குள் தீய ஒழுக்க செயலுக்காக குற்றவாளி எனத் தீாப்பளிக்கபபட்டவர் அலலது மூன்று மாதங்களுக்குமேறபட்ட சிறைத் தனடனைக்குத்தீர்ப்பளிக்கப்பட்டவர்.

இ) கடனைத் தீர்க்கவகையற்றவர் எனப பிரகடனம் செய்தவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கில் தீர்ப்பளிககப்பட்டவர்.

ஈ) இச்சங்கத்துக்கு அல்லது பதியப்பபட்ட வேறு எக் கூட்டுறவுச் சஙகததுக்கு எக்கடனையாவது திருப்பி கொடுக்காதவா அலலது வேறு எவ்விதத்திலும் தவறு செய்தவர்.

உ) இச்சங்கத்தில் வியாபாரி எனப் பதியபபட்டவர். அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்ட முறையில் ஒரு வியாபாரத்தினை நடத்துபவர்.

ஊ) சங்கத்தில் ஆதாயம் தரும் ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர்அல்லது ஆணையாளரின் முன் அனுமதி இன்றி ஏதாவது மதிப்பூதியம் பெறுவர்.

எ) இச்சங்கத்தில் அல்லது இச்சங்கம் உறுப்புரிமை வகிக்கும் வேறு எச்சங்கத்தின் ஊதியம் பெறும் ஊழியராய் இருப்பவர்.

ஏ) ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனவிலோ கொள்வனவிலோஅல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனால் செய்யப்பட்டு இருக்கும் அல்லது பேரப்பேச்சளவில் இருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கலில் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அக்கறை கொண்டு இருப்பவர்.

ஐ) கூட்டுறவுச் சட்டத்தின் இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தனது பதவியை அல்லது வேலையை கடந்த ஐந்துஆண்டுகளுக்குள் விட்டகல வேண்டிய நிலைக்குள் ஆனவர்,

ஒ) சங்கத்தில் தனது அரிசி பங்கீட்டு புத்தகம், அல்லது பங்கீட்டு அட்டை இணைக்கப்படாத ஒருவர்.

ஓ) கிளைக்குழுவினால் உறுப்பினரக அனுமதிக்காக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படாத ஒருவர்

ஔ) பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள் நகர சபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள்.

ஃ) 06-03-92ன் பின் அங்கத்தலராகச் சேர்ந்து ரூபா 100/ஐ பங்குப் பணமாகச் செலுதது முடிக்காதவரும அங்கததவராகச் சேர்ந்து ஒரு வருடம பூர்த்தியாக தவருமான ஒருவர்.

2. பின்வருவன நிகழுங்கால் அது காரணமாகவே கிளைக் குழு உறுப்பினர் ஒருவர் கிளைகுழு உறுப்புரிமை இழப்பர்.

அ) இவ்வுபவிதியின் பந்தி 1ன் படி தகமையற்றவராக ஆகின்றனர்.

ஆ) அடுந்தடுத்து மூன்று கிளைக்குழுக் கூட்டங்களுக்குச் செல்லாது அதற்காகப போதிய காரணங்கள் காட்டாததினால் கிளைக்குழுவின் தீர்மானததின்படி தமது பதவியைக் காலி செய்து விட்டார் எனக்கருதப்படுவர்.

இ) செயலாளருக்கு எழுத்து மூலம் ஒரு மாத முன்னறிவித்தல் கொடுத்து ராஜினாமச் செய்தவர்.

ஈ) சங்கத்தில் உறுப்புரிமை முடிவுற்றவர்.

23. அ) ஆணையாளரால் ஆக்கப்பட்டு அத்தகைய விதிகளுக்கு அமைவாகக் கிளைக்குழுத் தெரிவு செய்யப்படல் வேண்டும். சங்கம் பதிவு செய்யப்பட்ட திகதியில் இருந்து 6 மாதங்களுக்குள் முதற் கிளைக்குழுத் தெரிவு செய்யப்படல வேண்டும். அதன் பின் நடத்தப்படும் கிளைக் குழுக்களுக்கான உறுப்பினர்தெரிவு மூன்று வருடத்திற் கொருமுறை பொதுச்சபையின் காலம் முடிவுறுவதற்கு 4கிழமைக்கு முன் நடத்தப்படல் வேண்டும்.

23. ஆ) ஏதும் ஒரு கிளைக்குழு சம்பந்தமாக கிடைக்கப் பெற்ற நியமனங்கள் 5க்குக் குறைந்தவிடத்தும அலலது தெரிவு செய்யபபட்ட உறுப்பினர் தொகை 5க்குக் குறைவாக இருககுமிடத்தும அக்கிளை அந்தக் கிளைக்குவிற்கு எல்லா உறுப்பினர்களையும் மிகுதிக் காலத்திற்கு தெரிவு செயயலாம். ஆனால் அதற்கு முந்திய நியமனப் பத்திரய பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்ட துகதயிலிருந்து ஒரு வருடம் முடியும் முன் புது நியமனபபததிரங்கள் ஏற்றுக் கொள்ளப்படாது.

24. ஒவ்வொரு கிளைக் குழுவும் தமக்குள்ளிருந்து ஒரு தலைவரையும, ஒரு உப தலைவரையும் ஒரு செயலாளரையும தெரிவு செய்தல் வேண்டும். இவ்வகையில தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு உத்தியோகத்தரும் உபவிதி 23 ன்படி புதிய ஒரு கிளைக்குழு தெரிவு செய்யபபடும வரையிலோ அல்லது ஏதாவது தகுதியின்மை காரணத்தால் அல்லது பதவியிலிருந்து கிளைக்குழுவால் நீக்கப்பட்ட காரணத்தால் கிளைக் குழுவின் உறுப்புரிமையிலிருந்து நீங்கும்வரையிலோ அக்கிளைக்குழுவின் செயலாளருக்கு எழுத்துமூலம் ஒரு மாத முன்னறிவித்தல் கொடுத்து அக்குழுவின் உறுப்புரிமையிலிருந்து அல்லது பதவியிலிருந்து விலகும் வரை [illegible]

(வளரும்)

# விசாரணைக் கொடுப்பனவுகள்

கூட்டுறவுசங்கங்களில் இடம் பெறும் ஒழுக்காற்று விசாரணைகளுக்குரிய கொடுப்பனவுகள் சம்மந்தமான 14 / 94, 14 / 94 (1) ஆகிய இரு சுற்று நிருபங்களை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் திரு. ஆ. சுப்பிரமணியம் சர்மா சகல கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

விசாரணைகளுடன் தொடர்புடைய விசாரணை உத்தியோகத்தர், தட்டச்சு செய்பவர் ஆகியோருக்கு சுற்று நிருபத்தில் உள்ளவாறு கொடுப்பனவுகளை 1993 - 01 - 01ம் திகதிமுதல் வழங்கலாம் என அச்சுற்று நிருபங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுமாறும் நெஞ்சங்கள் - 6

**கே. எஸ். ஆனந்தன்**

நீல வானில் நிலா மடந்தை பவனி வந்து கொண்டிருந்தாள். தொலை தூரத்துக்கு அப்பால் இடைக்கிடையே கண்சிமிட்டும் நட்சத்திரங்கள் எங்கும் ஒரே அமைதி சூழ்ந்திருந்தது. மேல் மாடியிலிருந்தவாறே வெளியுலகைப் பார்த்துக் கொண்டிருந்த மதுராவின் உள்ளம். எல்லாம் அன்று நடைபெற்ற சுமித்திராவின் திருமண நிகழ்சிகளையும், ரவிசங்கரோடு சேர்ந்து தான் அவனுக்கு உரிமையுடன் உதவிய நிகழ்சிகளையும் சேர்த்துப் பார்த்து ஆனந்தமடைந்தாள்.

வடகடலில் துப்பாக்கி வேட்டுக்கள் இடைவிடாது முழங்கிக் கொண்டிருந்தன. தொடர்ந்து கடலில் ரோந்து சுற்றும் கடற்படையினர் பீரங்கி வேட்டுக்களைத் தீர்க்கும் சப்தம் புதருக்குள் பதுங்கும் முயல்கள் போன்று மக்கள் நடுங்கிக் கொண்டிருந்தனர். யாழ். நகரைச் சுற்றிவர தினசரி நடைபெறும் இராணுவ அட்டகாசங்கள்தான் நடந்து கொண்டிருந்தன. இவை யாவும் மதுராவின் மனதைப் பாதிப்பதில்லை. பிறந்தன்றே இறப்பு ஒன்று நிட்சயமான ஒன்று என்று நினைப்பவள் மதுரா. அது என்றைக்கு நடக்கவேண்டுமோ அன்றைக்கு நடந்தே தீரும் என்பதால் அவள் மனதை அலட்டிக் கொள்வதில்லை.

'' மதுரா '' சுந்தரேசன் கீழேயிருந்து அழைத்தார்.

'' அப்பா '' என்று குரல் கொடுத்தவாறே படிகளில் இறங்கி கீழே வந்தாள்.

'' குண்டுச் சத்தம் ஆமளியாய் கேட்கின்றது. சிலவேளை ஷெல் அடிபபான்கள் கீழே வந்து படுத்துக்கொள் '' என்றார்.

'' நீங்கள் பயப்படுகின்றீர்களா அப்பா '' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

'' கோட்டையைப் பெடியள் பிடித்துவிட்டதால் இராணுவம் கோபாவேசத்திலிருக்கின்றது. குண்டு வீசுகிற பிளேன் ஒன்றையும் சுட்டுவிழுத்தின ஆத்திரம் வேறு. கணடபடி ஷெல் அடிப்பான்கள். யார் செத்தால்தான் அவன்களுக்கு என்ன ? நாங்கள் தற்பாதுகாப்புக்காகவேனும் பாதுகாப்பாக இருக்கவேணும் '' என்றார் ஓர் தந்தைக்குரிய பரிவுடன்.

'' சரியப்பா நான் இங்கே உங்களோடு படுத்துக்கொள்கிறேன் ' என்றாள்.

'' அன்றைக்கு நான் குளிக்கப் போனபோது வந்து கூப்பிட்டாரே சண்முகம் என்பவர் ''

'' தெரியும் அப்பா இன்று திருமணத்துக்கும்வந்திருந்தாரே ''

'' ஆமாம் அவர் என்ன கேட்டார் தெரியுமா ? ''

'' என்னப்பா கேட்டார் ''

''உங்கள் மகள் ரவிசங்கருடன் நிற்கும்போது எல்லோரும் அவர்களையே பார்த்து கிசுகிசுக்கிறார்கள். வீட்டுக்குப் போனதும்பிள்ளைக்குதிருஷ்டி சுற்றிப்போடுங்கோ என்றார்'' என்று கூறிவிட்டுச் சிரித்தார்.

'' கோமதி மாமியும் அடிக்கடி என்னையே கூப்பிட்டு ஏதாவது சொல்லிக்கொண்டிருந்தார்கள். சுமதி கிண்டல் பண்ணினாள் அப்பா '' என்று கூறிச் சிரித்தாள்.

'' நீங்கள் பெரிய 'பிஸ்னஸ் மேன்' இதற்கெல்லாம் பயந்தால் எப்படியப்பா ? '' என்றாள் கிண்டலாக.

'' மதுரா, வெற்றியும் தோல்வியும் வாழ்க்கையில் சகசமானதுதான். ஆனால் நான் எப்பவும் சிறிதாக எதிர்பார்ப்பேன். பெரிதாக வந்தால் எனக்கு மகிழ்ச்சியாயிருக்கும். பெரியதை எதிர்பார்த்து சிறியதாய் வந்தால் என்மனம் சங்கடப்படுமில்லையா ? ''

'' அப்பா. இந்த விடயத்தில் தான் எனக்கும் உங்களுக்குமிடையே வித்தியாசம் எதையும் நாம் எதிர்பார்க்கப்படாதப்பா இன்றைய சூழ்நிலைக்கேற்ப வாழ்க்கையிலும் சரி, பிஸ்னஸ் ஆனாலும சரி அப்பப்ப எப்படியிருக்கோ அதற்கேற்ப முடிவு எடுத்துக்க வேணும். இன்றைய சூழ்நிலையில் அடுத்த நிமிடம என்ன நடக்குமோ என்று ஏங்குவதை விட இருக்கின்ற ஒவ்வொரு நிமிடத்தையும சந்தோஷமாக எதிர் கொள்ளப்பழக வேண்டும் '' என்று கூறிவிடடு

'' எனக்குத் தூக்கம் வருகிறதப்பா '' என்று எழுந்தாள்.

'' சரியம்மா போய் தூங்கு '' என்று கூறியவர் நாட்டுப் புகையிலை சுருட்டு ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டார்.

அவருடைய மனதில் மதுராவின்பேச்சு மிகுந்ததாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது அவளுடைய கொள்கை விளக்கங்கள் அவரை நிமமதிப்படுத்துவதாயில்லை. அவள் எதிர்காலம் எப்படி அமையுமோ என்ற கேள்விக்குறியேபூதாகாரமாய் எழுந்துநின்று அச்சுறுத்தியது.

யாக்கை - வாழ்க்கை நிலையாமை பற்றிய சித்தாந்தங்களை அறிநது வைததிருக்கும மதுரா சந்தாப்ப சூழநிலைகளைக்கொண்டே வாழ்க்கைப் போக்கை நிர்ணயிக்க முயலுகின்றாள். சமூக பரிமாணஙகளிலிருந்தும் விடுபட்டு சுதந்திரமாக வாழவேண்டும் என்ற கோட்பாட்டையே வலியுறுத்தும் மனோ நிலைக்களாகி விடுகின்றாள் இந்த மனோபாவம் எவ்வளவு தூரத்துக்கு சாத்தியப்படும் எனபது பற்றி அவள் சிந்திக்கத்தயாராயில்லை. தன்னுடைய வாழ்வு தன்னுடைய சுயநலம் பற்றிய ஒரு வட்டத்துக்குள்ளேயே அவளது அணுகுமுறை சுழன்று கொண்டிருக்கின்றது.

''என்னவோ அம்மா இந்தக் கல்யாணம் நல்லபடி நடந்தால் எனக்குச் சந்தோஷம். எனக்கு இது நல்லபடியாய் நடக்கவேண்டுமே என்றுதானம்மா பிரார்த்தனை ''

'' நீங்கள் எப்பவும் எதிலும் நம்பிக்கையீனப்பட்டுக்கொண்டுதானப்பா காலை வைப்பீங்கள். அவர்தான் பூரண சம்மதம் என்று கூறிவிட்டாரே. இனி என்னப்பா? என்றாள்''

'' இங்கே பாரம்மா எங்கட பாரம்பரிய முறைப்படி சாதகப் பொருத்தம் பார்த்தேன். பொருந்தவில்லை. மனப்பொருத்தம்தான் முக்கியம் என்று நீ கூறுகின்றாய். இதனால் தான் நான் பயப்படுகின்றேன். ''

இவற்றை நினைக்கும்போது சுந்தரேசனுக்கு எதுவுமே செய்யத்தோன்றுவதில்லை. தன் வலிமைக்கு அப்பால்போய் விடும் பிரச்னைகளுக்கு துணையாய் ''முருகா'' என நல்லூர் முருகனை வாய்விட்டு அழைத்துக்கொண்டேஎழுந்துபடுக்கை நோக்கிச் சென்றார்.

காலைப் பொழுதின் இனிய அமைதியை அழித்துக்கொண்டு வான்பரப்பில் உலங்கு வானூர்தி நீந்திக்கொண்டிருந்தது. வெளியே வந்து பார்த்துவிட்டு உள்ளேசென்ற கோமதியம்மாள் மகனுக்கு தேனீர் எடுத்துக்கொண்டு சென்றாள். ஏதோ ஓர்கோவையில் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்த ரவிசங்கர் தாய் வந்ததைக் கவனிக்கவில்லை.

'' என்னப்பா இன்றைக்கு வேலையா ? '' என்றாள்.

'' இன்றைக்கு நிவாரணப் பணிக்கான பங்கீடுகள் பற்றிய கூட்டம். அதுதான் ... ... இப்படிவையுங்க '' என்று மேசையிலிருந்த ஓர் கோவையை நகர்த்தி தேனீர் '' டம்ளர் '' வைப்பதற்கு இடம் கொடுத்தான்.

'' காலமையே இன்றைக்கு ஹெலி சுத்த ஆரம்பிச்சிட்டுது தம்பி '' தாய்க்குரிய பரிவுணர்வோடு மகனை ஏறிட்டாள்.

'' அவன்கள் தங்கடை வேலையைச் செய்கிறான்கள் நாங்களும் எங்கடை வேலைகளைச் செய்யத்தானேயம்மா வேண்டும '' என்று சிரித்தான்.

'' அது சரியப்பா. அவன்கள் மக்களை கொலை செய்யத் திரியுறாங்கள். ''

'' நாங்கள் மக்களைப் பசி, பட்டினி கிடக்காமல் ஏதோ உளவதைப் பங்கீடு செய்து அவர்களை கஸ்டத்திலிருந்து, இறப்பிலருந்து காப்பாற்றத் தான் உழைககின்றோம். கடவுளுக்கு எதுவிருப்பமோ அப்படி நடக்கட்டுமே. ''

'' உன்னுடன்கதைத்துவெல்ல முடியாதடா ரவி ''

'' அம்மா. இதுயாவும் நீதந்த பிச்சையம்மா ''

'' ரவி. அப்படிச் சொல்லாதேடா, பெற்றவர்கள தங்கள் பிள்ளைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளைத் தான்டா நானும் செய்தேன் '' என்றாள்.

அம்மா. ஒரு தாய் செய்ய வேண்டிய கடமைகளுக்கு மேலே நங்கள் செய்திருககின்ற கடமை வெறும் பச்சையில்லையமமா. நீங்கள உங்களையே, உங்கள் சுகங்களையே அழித்துக கொண்டு செய்த தியாகம்தான் அம்மா என்னை இந்த நிலைக்கு உயர்த்தியுளளது எமது தாயகவிடுதலைககு போராடும பிள்ளைகளைப் போல துப்பாக்கி ஏந்திப் போராடா விட்டாலும் நான் ஏற்றுள்ள தொழில் கூட ஒரு வகையில் இந்தப் போராட்டத்தின் பங்களிப்புத்தான். சயபளத்துக்காக, தன குடும்பத்துக்காக உழைததாலும் இன்றைய சூழ்நிலையில் எங்கள் மக்களுககாக உயிரைப் பணயம வைத்துத்தான் ஒவ்வொருத்தரும் கடமையை செய்கிறார்கள். ஒரு கூட்டுறவுச் சங்கத்துக்கு மேலே குண்டு விழுந்துவிட்டது என்பதால் கூட்டுறவுச் சங்கங்களை இழுத்து மூடிவிட்டார்களா ? துணிந்து இப்போதும் தம்கடமைகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். இதுவும், போராட்ட வரலாற்றுல ஓர் பங்களிப்புத்தானே. அதே போன்று நானும் என் கடமையை விட மேலதிகமாய் இதில் ஓர் சேவையை செய்ய வேண்டியது என் கடமை. ''

'' அடேயப்பா ! உன் மனம் போல செய்யவேண்டும் தம்பி. அம்மாமீது உனக்குள்ள அதீத பாசத்துக்கு நீ இப்படி ஒரு பாடம் கற்பிக்கின்றாய். பரவாயில்லையப்பா, அத்துடன் உன்னுடைய வாழ்க்கைப் பிரச்னையையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும் தம்பி '' என்றாள் கோமதியம்மாள்.

'' அம்மா நீங்களே எனக்குத் தந்தையும், தாயுமாயிருந்து இந்நிலைக்கு உயர்த்தியுள்ளீர்கள். எனக்கு உள்ள கடமைகளை, பொறுப்புக்களை உங்கள் ஆசியுடன் நிறைவேற்றியுள்ளேன் தங்கை சுமித்திராவின் திருமணம் முடிந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதுவும்தவிர உங்கள் விருப்பம்எதுவோ அதுவேஎன்விருப்பமும். எனக்கு என்று ஒருதனி விருப்பம் இல்லையம்மா '' என்றான்.

''என்னப்பா நீ முழுப்பொறுப்பையும் என் தலையில் சுமததி விட்டு நீ தப்பிக்கப் பார்க்கிறாய். உன் வாழ்க்கைப் பிரச்சனை இது. உன் எதிர்காலத் துணையை நீதானே ... ... '' என்று சிரித்த கோமதியம்மாள் பாசப்பரிவுடன் அவன் தலையைத் தடவிவிட்டாள்.

'' அம்மா ''

'' சொல்லப்பா ''

'' அந்தப்பெண்மதுராஎன்னை விரும்புகிறாள். உங்களுடைய அன்பையும் பெற்றுவிட்டாள். மிஸ்டர் சுந்தரேசன்கூட உங்களைக் காக்காபிடித்து விட்டார்.

உங்கள் விருப்பம் எதுவோ அதன்படி செய்வது என் கடமை என நான் நினைக்கின்றேன் . ''

'' அதுசரி. அந்தப் பெண்ணை விட்டிட்டு ஓர் ஏழைப்பெண்ணை படிக்காத பெண்ணை நான் தேர்ந்து எடுத்தால் நீ மனப்பூர்வமாய் சம்மதிப்பாயா? ''

'' நொண்டியோ, குருடோ உங்கள் மனதுக்குப் படித்த மானவளைக் கூட்டிவந்து கட்டடா தாலி என்று கூறுங்கோ. நிட்சயமாய் நான் தாலி கட்டுவேன். உங்கள் பிளளை உங்கள் சொல்லை மீறி என்றும் எதுவும் செய்ய மாட்டான். இதுசத்தியம் '' என்று தாயின் கையில் தன் கையை வைத்து உறுதி செய்தான்.

' ரவி ' என்று அவன் கரத்தை எடுத்து நெஞ்சோடு நெஞ்சாய் அழுத்தி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் கோமதியம்மாள்.

இன்றைய நாகரீக உலகம் பல்துறைகளிலும் முன்னேறி விட்டது. என்னதான் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் ஓர் பந்த பாச உறவு இருந்தாலும் திருமண விடயத்தில் தன் மன விருப்புக்கே முக்கியத்துவமளிக்கின்றனர். பெற்றோரும் அவர்களுடைய விருப்பு வெறுப்புக்களை அனுசரித்தே நடக்கவேண்டியவர்களாயிருக்கின்றனர். ஆனால் தான் பெற்றமகன், குடும்பத்தலைவனுக்குரிய பொறுப்புக்களை எல்லாம் மன நிறைவுடன் செய்து முடித்தபின்பும் தன் அன்புக் கோட்டையை விட்டகலாத நிலையில் உள்ள மாண்பை நினைத்து மனமுருகினாள் கோமதியம்மா.

'' என்னம்மா பயந்திட்டீங்களா? '' என்று சிரித்தான் ரவி.

'' இல்லையப்பா அடிக்கடி சொல்வாயே ' அம்மா உங்களை, உங்கள் சுகங்களை, எல்லாம் அழித்துத்தான் எங்களை வளர்த்து ஆளாக்கினீர்கள் ' என்று. அந்த துன்பங்கள் யாவும் மறந்து உன் அன்பு மழையில் தோய்ந்து என்னையே நான் புடம்போட்டுக் கொண்ட மகிழ்ச்சியில் திழைத்துவிட்டேனப்பா. என் பிள்ளைக்கு ஏற்றபெண்ணை நான் நிட்சயித்து விட்டேன். இந்த வீட்டுக்கு வந்த பலன் நாம் தேடாமலே என் பிள்ளைக்கு யாவும் தேடி வருகின்றன. மகாலட்சுமியாட்டம் பெண் பட்டதாரி. செல்வச் சீமான் சுந்தரேசனுடைய ஒரே செல்லப்பெண் மதுராவை திருமணம் செய்ய நிட்சயம் செய்தாச்சு சரியா? சம்மதமா '' என்று அவன் தலைமுடியைப் பற்றி செல்லமா ஆட்டினாள்.

'' அம்மா உங்கள் விருப்பமே என் விருப்பம். என்னை ஆசீர்வதியுங்கள் என்று எழுந்து குனிந்து அவள் பாதங்களை தொட்டு வணங்கினான்.

''மனம்போல வாழ்வாயாக'' என்று அவனை ஆசீர்வதித்த கோமதியம்மா தன் குலதெய்வமான அம்பாளை நினைத்து சிரசுமீது கைகுவித்து வணங்கினாள்.

தாய்க்கும் மகனுக்குமிடையில் நடைபெற்ற உரையாடலில், அறைக்குவெளியே விறாநதையில் வந்து நின்ற நபரை கவனிக்க முடியாது போய் விட்டாதால் வந்தநபர் எதுவுமே பேசமுடியாத நிலையில் அந்த இனியபாசப்பிணைப்பை பார்த்து மெய் சிலிர்த்து நின்றிருந்தார்.

( வளரும் )

---

*மருத்துவப் பகுதி*

## சித்தர்களின் சிறுநீர் பரிசோதனை

இன்று பலவிதமான நோய்களை மனிதனின் சிறுநீர் பரிசோதனைமூலம் கணடுபிடிக்கப்படுகிறது.

இந்த சிறுநீர்ப் பரிசோதனையானது பல நூற்றாணடுகளுக்கு முன்னரே சித்தர்கள் நடைமுறைப்படுத்தி வந்துள்ளார்கள். இதற்கு நீர்ககுறி, நெய்குறி எனப்படடது. குறுப்பாக தேரையர் என்ற சிததர் ஒரு நூல் எழுதியுள்ளார்.

*நீர்க்குறி :*

மனிதஉடம்பிலிருந்து வெளிவரும் சிறுநீரின் நிறம், எடை, நாற்றம், நுரை, குறைதல் என ஐந்துவீத இயல்புகள் உண்டு. சிறுநீரானது மஞ்சள், சிவப்பு, பச்சை, கருமை, வெணமை எனத்தனி நிறமாக இருக்கும். இந்த நிறக்குறியிலிருந்து நீரின தன்மை, இயல்பு அதனால் ஏற்படப்போகும் - ஏறபட்டிருக்கும நோய்கள் அவைகள் தீரும் - தீராதென்ற நிச்சயகுறிகளை அறிதலாகும். ( சாதாரணமாக வைக்கோல் நிறத்தில் சிறுநீர் உடையவர்களே, ஆராக்கியமானவர்களாம் )

*நோய்க்குறிகள் :*

இந்த முறையில் காலையில் முதலில் வெளியேறும் சிறுநீரை ஒரு கண்ணாடிப்பாத்திரத்தில் பிடிதது ஒரு துளி நல்லெண்ணைவிட்டு சூரிய வெப்பம் படும்படியாகவும, அதிக காற்று வீசாத இடமாகவும், வைத்து, சிறுநீரில் விட்ட எண்ணைத்துளி ஏற்படுத்தும் மாற்றங்களைக் கணடு மனித நோய் கண்டுபிடிக்கப்பட்டது. உ-ம் சிறுநீரில் விட்ட எண்ணெய்த்துளி பாயைப்போல் நீண்டால் அது வாத நோயைக் காட்டும்.

எண்ணெய் துளி மோதிரம் போல் இடை விட்டுப் பரவினால் உடலில் பித்த சம்மந்தமான நோயைக் காட்டும்.

சிறுநீரில்விட்ட எண்ணெய்த் துளி, வட்ட வடிவமாகவும், மெதுவாகவும் பரவிவந்தால் அந்த நோயாளியைப பற்றி பயமொன்றும் இல்லை. எண்ணெய் துளி எவ்விதம் பரவுகிறதோ அந்த வேகத்துடனே எல்லாவித நோய்களும் தீரும்.

நோயாளியின் சிறுநீரில் விடும் எண்ணெய் துளியானது பொங்கி அந்தநீர் முழுவதும்பரவுமாகின் அந்நோய்க்கு இவ்வுலகில் மருந்தே இல்லை.

ஆதரம் - முத்தாரம்
தொகுப்பு : துபசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் சேமிப்பில் சி.க.கூ.ச.சமாசம்

எமது மாணவர்கள் கூட்டுறவினூடாக சேமிப்புத் துறையிற் பழக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்தால் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறையில் மாணவர் சேமிப்புத்திட்டம் உள்ளது.

மாணவர்களின் சேமிப்பிற்குப் பற்றுச்சீட்டு வழங்கி அவர்களின் பாஸ் புத்தகத்திலும் பதிவதன்மூலம் அவர்களின் சேமிப்பு உறுதிப்படுத்தப்படுகிறது. அவர்களின் சேமிப்பை அதிகரிக்கும பொருட்டு பரிசு வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது. மாணவர்களின் கணக்குகள் சீர்செய்யப்பட்டு மாதாந்தமோ, காலாண்டுக் கொருமுறையோ கணக்கு மீதிகள் பாடசாலை அதிபருக்கு அனுப்பப்படுகிறது.

மாணவர்களால் முன் கூட்டியே மேற் கொள்ளப்படும் சேமிப்பு வருட ஆரம்பத்தில் பாடசாலை உபகரணங்கள், அப்பியாசப் புத்தகங்களை வாங்குவதற்குப் பயன்படும். இதன்மூலம மாணவர்களின் வீண் செலவுகள் தவிர்க்கப்பட்டு வருங்காலநன்மைகளைப் பெறுவதோடு சிறுவயதிலேயே சேமிப்புப் பழக்கத்தில் ஈடுபடுகின்றனர்.

மாணவர் சேமிப்பின் முகவர்களைச் சமாசம் நியமித்து அவர்களினூடாக மாணவர் சேமிப்பு அறவிடப்படுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. சங்கங்களின் அங்கத்தவர்கள் தமது சங்கத்தில் பிள்ளைகளுக்காக மாணவர் சேமிப்புச் செய்யக்கூடிய வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறியோர் முதல் பெரியோர்வரை எல்லோருக்கும் சேமிப்புப் பழக்கத்தை ஊட்ட முடியும். '' கூட்டுறவே நாட்டுயர்வு '', '' ஒன்று பட்டால் உண்டு வாழ்வு '' என்ற கூற்றுக்களுக்கமைய அனைவரும் இத்திட்டத்தில் இணைந்து ஒற்றுமையோடு செயற்படச் சந்தர்ப்பமுண்டு.

மாணவர் சேமிப்புச்செய்யும் பெற்றோர் பணவசதி குறைந்தவரெனின் தாம் அங்கம் வகிக்கும் சங்கத்தில் உயர்கல்விக் கடனைப்பெற்று பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம். சிறுபராயம் முதல் சேமிப்பிலீடுபட்டோர் இச்சேமிப்பு பெரிய அளவில்

**எம். யோகேஸ்வரி**

திரளும்போது மேற்படிப்புகளின்போது பெருநன்மைகளை அடைந்து கொள்வார். சேமிப்பை மீளப்பெறுவதன் மூலமோ, சேமிப்பின் துணையோடு கடன் பெறுவதன் மூலமோ இந்நன்மைகள் மாணவர்களைச் சென்று சேரும். மாணவர் சேமிப்புக்கு சமாசம் 6% வட்டியினை வழங்குகின்றது.

சமாசம் இத்திட்டத்தை அமுல் செய்கின்ற யாழ். மாவட்டத்தின் 75 பாடசாலைகளிலும் சுமார் 7500 மாணவர்கள் சேமிப்பிலீடுபட்டுள்ளனர். 1990 ம் ஆண்டுக்குமுன் வெற்றிகரமாக மாணவர் சேமிப்புச்செய்த பாடசாலைகளிற் பல இடம்பெயர்ந்துள்ளமையினால் இத்திட்டம் வெற்றிகரமாக செயற்பட முடியவில்லை. இந் நிலையை அகற்றி மாணவர்கள் மீண்டும் சேமிப்பில் புத்துணர்ச்சியோடு ஈடுபடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினால் மாணவர்களின் கல்வித்தேவைகளை ஓரளவு பூர்த்திசெய்யலாம்.

# உண்டேன் - உண்டேன் - உண்டேன் உண்டிலேன் ஔவையார் - சிலேடை

பாண்டிய மன்னனின் திருமணத்திற்குச்சென்ற ஔவைப் பாட்டியார் திருமணக்கூட்டத்தில் நின்றிருந்த சனநெரிசலில் நன்கு மாட்டிக்கொண்டார். அங்கிருந்தோர் எவரும் ஔவைப்பாட்டியாரை அடையாளம் காணவில்லை

சன நெரிசலில் சிக்கிக் கொண்ட ஔவையார், திருமண வீட்டில் விருந்து சாப்பிட முடியாமல் வீடுதிரும்பினார்.

வழியில் ஔவையாரைக் கண்ட புலவர்கள் திருமணம் நன்கு கண்டீரா ? விருந்தெல்லாம் திருப்தியாய் உண்டீரா ? என்று கேட்டார்கள்.

ஔவையார் என்ன சொன்னார் தெரியுமா ? '' உண்டேன் ''; '' உண்டேன் ''; '' உண்டேன் '' என்று மூன்று முறை பதில் சொன்னார்.

புலவர்களோ, அப்படியா ? திருப்தியான உணவு என்பதால் மூன்று முறை குறிப்பிட்டீரோ ? என்றனர்.

அதற்கு ஔவையார். '' கூட்டத்தில் நெருக்குண்டேன்; தள்ளுண்டேன், ஆகையால் '' சுருக்குண்டேன் '' ஆனால் சோறுமட்டும் உண்டிலேன். அதனைத்தான் மூன்று முறை '' உண்டேன் '' என்று குறிப்பிட்டேன் என்றார்.

# மாணவர் அரங்கு

## நீங்கள் எந்த வகையினர் . . . ?

நண்பர்கள் மூன்று விதம். உங்களுக்கு கிடைத்திருக்கும் நண்பா எந்த வகையினர், நீங்கள் எந்தவகை ? இதோ சுலபமாகக் கண்டுகொள்ளுங்கள்;

★ பனை மரம்:- தானாக முளைத்து தானாக தண்ணீர் குடித்து, தானாக வளரும். அதுபோல் நமக்கு வலியவந்து உதவி செய்வர்கள சிலர்,

★ தென்னை மரம்:- எப்பொழுதாவது தண்ணீர் விட்டால் போதும் வளர்ந்துவிடும. அதுபோல் எப்போதாவது உதவி செய்தால் அதை நினைவில் வைத்து நமக்கு அடிக்கடி உதவுபவர் சிலர்.

★ பாக்கு மரம் :- தினமும் தண்ணீர் விட்டால் தான்வளரும். அதுபோல் தினமும் உதவி செய்தால்தான் நம்மை சிலர் கவனிப்பார்கள்.

## கலோரி அளவு

தினசரி ஒருவரது உணவில் இருக்கவேண்டியகலோரி அளவு

| வயது | | அளவு |
|---|---|---|
| 0- 6 | இருபாலார் | 1250 ,, |
| 6-10 | ,, | 1500 ,, |
| 10-14 | ,, | 2300 ,, |
| 14-21 | பெண்கள் | 2250 ,, |
| 14-21 | ஆண்கள் | 2500 ,, |

## திருமண வயது

இலங்கையில் சராசரி திருமண வயது 1901 -1987 வரை

| ஆண்டு | ஆண் | பெண் |
|---|---|---|
| 1901 | 24.6 | 18.3 |
| 1911 | 26.5 | 20.8 |
| 1921 | 27.0 | 21.4 |
| 1946 | 27.0 | 20.7 |
| 1953 | 27.2 | 20.9 |
| 1963 | 27.9 | 22.1 |
| 1971 | 28.0 | 23.5 |
| 1981 | 27.9 | 24.4 |
| 1987 | - | 24.8 |

ஆதாரம் :
Fertility in SriLanka.

# தெரிந்துகொள்ளுங்கள்

★ பஞ்சத்தால் துவளும் '' சோமாலியர் '' தான் உலகில் அதிகமான ஆடுகளை கப்பல்மூலம் ஏற்றுமதி செய்யும் நாடாகவுள்ளது. ஒரு முறைக்கு 55000 ஆடுகள்வீதம் சவூதி அரேபியாவிறகு ஏற்றுமதி செய்து பஞ்சத்தைப் போக்கிக்கொள்கிறது.

★ அமெரிக்க கடற்படையில் உள்ள '' கடல்நிழல் '' (Sea shadow) என்னும நீர் மூழ்கிக்கப்பல் கடலில் மூழ்கியதும் தனது சிறகுகளை விரித்து பறவைபோல வேகமாக ராடர்களில் தெரியாதபடி நகர்ந்து செல்லுமாம். எதிரியின் கப்பல்களைத் தாக்கும் எதிர்ப்புச் சக்தி மிக அதிகமாக உள்ள ஒரு புதிய நீர் மூழ்கியாகும்.

★ கேரளா நாட்டைச்சேர்ந்த ரமேஷ் நாராயணன் என்பவர் 30 மணிநேரம் கச்சேரி செய்து உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார். உலகசாதனைப் புத்தகமான ''கின்னஸ்'' புத்தகத்தில் இவரது பெயர் இடம்பெறவுள்ளது

### கவனமாயிருங்கள்

எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள், பழக்கங்கள், ஒழுக்கம் ஆகியவற்றில் கவனமாக இருங்கள். ஏனெனில்;

எண்ணங்கள், வார்த்தைகளாகி, வார்த்தைகள் செயல்களாக உருப்பெற்று, செயல்கள் பழக்கங்களாக மாறி, பழக்கங்கள் ஒழுக்கமாகி ஒழுக்கம் வாழ்க்கையை உருவாக்கிறது.

### நூல்கள் சொன்னவை

★ திருக்குறள் - மனிதன் மனிதனுக்கு சொன்னது.

★ பகவத்கீதை - இறைவன் மனிதனுக்குச்சொன்னது.

★ திருவாசகம் - மனிதன் இறைவனுக்குச் சொன்னது.

மாணவ மணிகளே !

புத்தாண்டு வாழ்த்துக்களை ஐக்கியதீபம் தெரிவித்துக்கொள்கிறது.

# குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்க . . .

உங்கள் கணவரைப் பற்றி எப்பொழுதும பெருமைபேசிக் கொள்ளுங்கள் அவர் யாராக இருந்தாலும் சரி, எந்தவேலையில இருந்தாலும் உங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள்.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும, உங்களுக்கு அவரிடம் உள்ள அன்பையும், காதலையும் வெளிபபடுத்துங்கள்.

கணவரிடம் உள்ள சிறிய குறைகளைப் பெரிதுபடுத்தாதீர்கள். பொறுமையைக் கையாண்டு குறைகளைத் திருத்துதல், குற்றங்கண்டு பிடித்தலைவிடச் சிறந்தது.

கணவரிடம் உள்ள பெரிய குறைபாடுகளைப்பற்றி அவரிடம பொறுமையாகப் பேசுங்கள். அவா மனம் நோகாதபடி உங்கள் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரையுங்கள்.

வீட்டில் ஒருபோதும் கண்ணீர் விடாதீர்கள். அழுவது ஒருவரது பலவீனத்தைக் காட்டும. அழுவது மேலும் பிரச்னைகளைஉருவாக்கும். இதை மறவாதீர்கள்.

பிரச்னைகள் உருவாகும் நேரத்தில் அவற்றை மனஉறுதியுடனும், திடசிந்தனையுடனும் சந்தியுங்கள். பயப்படாதீர்கள்.

கடந்த காலம் கடந்தவையாகவே இருக்கட்டும். மீண்டும் பழைய குப்பைகளைக் கிளறி அவர் மனதைப்புண் படுத்தாதீர்கள்.

ஒருவர் கோபமாக இருக்கும் பொழுது மற்றொருவர் பொறுமையைக் கையாளுங்கள். இருகைகள் தட்டினால் தோன சப்தம் ?

' நன்றி ' 'வருந்துகிறேன்' போன்ற வார்த்தைகளை இருவரும் உபயோகிப்பது மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும்.

ஆணுக்கு '' தான் '' என்ற (Ego) எண்ணம் சற்று அதிகம தான். அதற்கு வளைந்து கொடுத்து ஒருமுறை புகழ்ந்தால் அவா உங்களை பதிலுக்கு பத்துமுறை புகழ்வார். ஞாபகமிருக்கட்டும.

பிரச்னைகளைத் தீர்க்காமலும, மன உளைச்சலுடனும் ஒருபோதும் படுக்கைக்குச் செல்லாதீர்கள். எக்காரணத்தைக்கொண்டும் பிரச்னைகளை அவ்வப்போது பேசித்தீர்த்துக் கொள்ளுங்கள்.

அன்றாடவாழ்வில் குழப்பங்கள் வரும்பொழுது ஒருவா மற்றொருவர்மீது குற்றம் சுமததுவதைத் தவிர்த்து அதனைத் தீர்ப்பது எப்படி என்று சிந்தியுங்கள்.

உங்கள் கணவரிடம் உள்ள நிறைகுறைகளை அடிக்கடி எண்ணிப் பார்க்கவும்.

ஒரு பெண்மட்டுமே மனைவியாக, தாயாக, சகோதரியாக ஒரு ஆணிற்கு ஆகமுடியும. காலம் சென்றாலும் கண்டிப்பாக ஒருநாள் உங்கள் கணவர் உங்கள் அருமையை உணர்ந்தே தீருவார்.

மகிழ்ச்சியான இல்வாழ்க்கை அமைவது ஒரு பெண்ணின் கையில் மட்டுமே உள்ளது என்பதை மறந்து விடாதீர்கள்.

ஒன்றுமட்டும் உறுதி நீங்கள் எவருக்கும் அடிமை இல்லை. உங்களை உங்கள் கணவர் அலட்சியப்படுத்தவோ, துன்புறுத்தவோ, பாராமுகமாக இருக்கவோ உரிமை அறவே கிடையாது. இதை அவருக்கு முதலிலேயே தெரியப்படுத்துங்கள்.

— மாமி

# சமையல் செய்வோமா ?

## கத்தரிக்காய் குழம்பு

தேங்காய் பாலில் கொலஸ்ரோல் உண்டு. இருதயநோயாளர்கள் தேங்காய் எண்ணை, தேங்காய்ப்பால் சேர்த்துக் கொள்ளக்கூடாது. இப்போது தேங்காய் அதிக விலைதானே.

தேங்காய்ப்பால் இல்லாமல் கத்தரிக்காய், வாழைக்காய், புடலங்காய், பாவற்காய், வெண்டிக்காய் குழம்பு சமைக்கலாம்.

கத்தரிக்காய் 100 கிறாம், மஞ்சள் தூள் அரை தே கரண்டி, மிழகாய்தூள் அரை தே. கரண்டி, பச்சைமிளகாய் 2, வெங்காயம் 10, பழப்புளி பாக்கு உருண்டை அளவு, கடலமிழ்து ( உப்பு ) சிறிதளவு.

2கப்நீரில் புளியைக்கரைத்து மஞ்சளையும், கடலமிழ்தையும், (உப்பு) கலந்து, அடுப்பில் சுடவைத்து, மெல்லிய நீளமாகவெட்டியகத்தரிக்காய் துண்டுகளை போட்டு வேகவைக்கவும். இரண்டு நிமிடத்தின்பின் பச்சை மிளகாய், வெங்காயம்வெட்டி, மிளகாய் தூள், கறிவேப்பிலை எல்லாவற்றையும் சேர்த்து போடவும். பருப்புஅவித்த நீர், அல்லது பருப்பு அரைத்து கழாக்கப்பட்ட நீரை கறியினுள் விட்டுக் குழம்பாக்கி விடவும். விரும்பினால் பூடு, வெந்தயம் சேர்த்துக்கொள்ளலாம்.

— ராணி




# சகோதரிகளே உங்களுக்காக

எந்த ஒரு பொருளையும், இல்லை என்று கூறாமல், அதை வாங்கிக்கொண்டு வாருங்கள் என்று கூறுங்கள்.

இரவில் வீட்டைப் பெருக்குவதும, குப்பையை தெருவில் கொட்டுவதும் கூடாது. பகலில் பெருக்கியவுடன் உடனே குப்பையைவெளியில் கொட்டி விடவேண்டும். சேர்த்துவைக்கக்கூடாது.

பெண்கள் கண்ணீர்விடும் வீட்டில் செல்வம் தங்காது தலையை விரித்துக்கொண்டிருப்பதும், இருகைகளாலும் தலையைச் சொறிவதும் வறுமைக்கு வழிகாட்டும்.

★ வலது புறமாக காலையில் எழுவது நல்லது.

★ வாசலுக்குவெளியில் வந்து தான் எந்த தர்மமும் செய்யவேண்டும் உள்ளே இருந்துகொண்டு எத்தகைய தர்மமும் செய்யலாகாது.

★ கன்னிப் பெண்கள் தண்ணீர்குடத்தோடு எதிரில் வந்தால் நல்லது.

★ பெண்கள் கூந்தலை நுனிவரை முடிந்திருக்க வேண்டும்.

### தூக்கணத்தாங் கூடு

ஆலம் விழுது போலே
அந்தப்பிள்ளை தலைமயிரு
தூக்கி முடிஞ்சிட்டாலோ
தூக்கணத்தாங் கூடுபோல.

ஏணிமேலேஏணிவைச்சு அவள்
இளங்கூந்தல் ஆத்தையிலே
ஏணிக்குக் கீழே - நீ
ஏங்கியிருந்தாயல்லோ.

### தலை முடி மிருதுவாக

சாதம் வடித்த கஞ்சியில் சீயக்காய்த் தூள் போட்டுத் தேய்த்துக்குளித்தால் குளிர்ச்சி நல்லதுன்னு தெரியும். குக்கரில் சாதம் வடிக்கும்போது கஞ்சிக்கு என்ன செய்வது ? சீயக்காய்பொடி அரைக்கும் போதே சீயக்காய், வெந்தயம், எலுமிச்சைத் தோல இவற்றுடன பச்சரிசியையும், சிறிது சேர்த்து அரைக்கவும். குளிப்பதற்கு 5 நிமிடம் முன்னால் சீயக்காய்ப் பொடியில் வெந்நீர்விட்டு வைத்தால், பொடி நிறைய காணுவதோடு தேய்த்துக் குளித்தபின் தலை முடியும் மிருதுவாய் கருமையாய் இருக்கும்.

தயாரிப்பு : தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம வங்கிகளை வலுவாக்கவேண்டும்

"அகில இலங்கை ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் கூட்டுறவு கிராமியவங்கிகளின் செயற்பாடுகளை ஆராயும் போது வடமாகாணத்தில்குறிப்பாக யாழ். மாவட்டத்தில் வங்கிகளின் வைப்புக்கள், கடன்கள் மிகக்குறைவாகக் காணப்படுகிறது.

வலிமேற்குப்பகுதியில் உள்ள பல நோக்குக் கூ. சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் வடபிரதேச மக்கள்வங்கி முகாமையாளர் திரு. இ. அருளானந்தம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் காரியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு பல நோ. கூ. சங்கத்தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், வங்கிச்சேவை முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பிரதேச முகாமையாளர் திரு. இ. அருளானந்தம் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

மாவட்ட, மாகாண நிலைகளில் கூட்டுறவு வங்கிகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில், எமது பிரதேசத்திலுள்ள கிராமிய வங்கிகளை வலுவுள்ளதாக செயற்படவைத்தால் இவ்வங்கிக்கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ள கூட்டுறவு வங்கியின் அடித்தளமாக அமையும் வாய்ப்பு உண்டு. இந்நிலையில் கொள்கை ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதாயிருந்தால் அதற்கு உதவ மக்கள் வங்கி ஆயத்தமாக உள்ளது என்று தெரிவித்தார்.

கூட்டத்தில்கலந்துகொண்ட சங்கானை பல நோ. கூ. ச. தலைவரும், மாவட்டகூட்டுறவு சபைத் தலைவருமான திரு. வை. செந்திநாதன், பண்டத்தரிப்பு பரிஷ் பல நோ. கூ. சங்கத்தலைவர் திரு. ச. செல்வரத்தினம் ஆகியோர் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகளை வலுவுள்ளதாக விரிவுபடுத்தலே எமது விருப்பம் என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

## வாசகர் உள்ளம் வாழ்த்துகிறது

பத்திரிகை உலகில் நீண்டகால வரலாற்றை உடைய "ஐக்கிய தீபம்" தனது ஓராவது ஆண்டை பூர்த்திசெய்து 44-வது அகவையில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில், மேலும் பல சிறப்பம்சங்களுடன் "ஐக்கிய தீபம்" ஒளிவீசி பவனிவர வாழ்த்துகின்றேன். கூட்டுறவுச் சபையின் பணி சிறக்கட்டும்.

— பி. சண்முகசுந்தரம்

கூட்டுறவாளர்களினால் வெளியிடப்பட்டுவரும் ஐக்கிய தீபம் திங்கள் இதழ் பத்திரிகை உலகில் புரட்சிசெய்து வருவது பாராட்டப்படக்கூடிய தொன்றாகும். கூட்டுறவு அம்சங்கள் மட்டுமின்றி மாணவர், மகளிர் பயன்படத்தக்க வகையில் விடயங்களைத் தாங்கிவரும் ஐக்கிய தீபம் ஓராண்டைப் பூர்த்தி செய்வதை உளமார வாழ்த்துகிறோம்.

— மகாஜன மாணவர்கள்

கூட்டுறவாளர்களின் பிரச்னைகளை அவ்வப்போது சுட்டிக்காட்டி அதில் தீர்வுகாண்பதில் வெற்றி கண்டுவரும் "ஐக்கிய தீபம்" தொடர்ந்து வெளிவர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

— க. பரமசாமி

# யாழ். கூட்டுறவு அலுவலகம் தற்காலிகமாக இயங்க ஆரம்பித்துள்ளது

யாழ்ப்பாணம் அரச அதிபரின் நிர்வகிப்பின்கீழ் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி அலுவலகம் மே மாதம் முதல் தற்காலிகமாக இயங்க ஆரம்பித்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

572, மருத்துவமனை வீதியில் உள்ள கூட்டுறவு அபிவிருத்தி (ப. தெ. வளம்) அலுவலகத்தில், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் திரு. தி. சபாரத்தினம், திரு. கே. பஞ்சலிங்கம், திரு. எஸ். ஜெயபாலன் ஆகியோர் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களை மேற்பார்வை செய்வர்.

திரு. தி. சபாரத்தினம் ப. தெ. வ. அ. கூ. சங்கங்கள், சமாசம், கொத்தணிகளையும், திரு. கே. பஞ்சலிங்கம் இரண்டாம்படி சங்கங்களான கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம், யாழ். மா. வி. உ. சந். நுகர்- கூ. சங்கங்களின் சமாசம், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூ. சங்கம், (பால் பண்ணை) ஆகியவற்றையும், திரு. எஸ். ஜெயபாலன், யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை, யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசம் என்பவற்றையும் மேற்பார்வை செய்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பிரிவுபசாரமும், வரவேற்பும்

அச்சுவேலி பல. நோ. கூ. சங்க பொது முகாமையாளர் திரு. மூ. ஆனந்தகிருஷ்ணன் இளைப்பாறியமையை ஒட்டியும்புதிய பொதுமுகாமையாளராக திரு. த. கவீந்திரதாஸ் பதவி ஏற்றமையை ஒட்டியும் பிரிவுபசாரமும், வரவேற்புபசாரமும் அண்மையில் நடைபெற்றது.

புத்தூரில் உள்ள சங்கத் தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாக்களில் சங்கத் தலைவர் திரு. க. பேரின்பநாயகம் கூட்டுறவு அலுவலர் திரு. க. பரநிருபசிங்கம் யாழ். மாவட்ட விவசாய சமாச பொதுமுகாமையாளர் திரு. ச. ஜெயசந்திரபோஸ் இயக்குனர் சபை உறுப்பினர்கள். ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் திரு. பொ. பாலசிங்கம் தொழிற்சங்க செயலாளர் திரு. தி. தாமரைச்செல்வன் மற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.

முன்னாள் பொதுமுகாமையாளர் திரு. மூ. ஆனந்தகிருஷ்ணனுக்குபணியாளர்சார்பில் தொழிற்சங்கத் தலைவர் திரு பொ. பாலசிங்கம் தங்கச் சங்கிலி அணிவித்துக் கௌரவித்தார்.

## புதிய அங்கத்தவர் இணைவு

சாற்று உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களைமட்டுமே பனை தெ. வ. அ. கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரைகாலம் தனது அங்கத்தவர்களாகச் சேர்த்திருந்தது. ஆனால் இன்று அனைத்துப் பனம் தொழிலாளர்களையும் இச்சங்கங்களுடன் இணைப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

மாகியப்பிட்டியில் சுளகு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 30 பேர்களை மானிப்பாய் பனை தெ. வ. அ. கூ. சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்க்கும் வைபவத்தில் கூட்டுறவு அ. உ. ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலிகாமம் பனை, தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணித் தலைவர் திரு. நா. கமலாசன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு. தி. சபாரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில், சாறுற்பத்தி தொழிலில் ஈடுபடாத ஏனைய பனம் தொழிலில் ஈடுபட்ட இப்பகுதி மக்களையும் உடன் தொடர்புபடுத்திய இலங்கை வங்கியின் யாழ். பிரதேச முகாமையாளருக்கு நன்றி தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் சுன்னாகம் இலங்கைவங்கிமுகாமையாளர் திரு. எஸ். விக்னராஜா தமிழ்ழ நிர்வாக சேவை கூட்டுறவுத்துறை செயலாளர் திரு. பா. குணராசா உட்பட வலிகாமம் கொத்தணியின் அங்கத்துவ சங்கங்களின் பொது முகாமையாளர்கள், தலைவர்களும் கலந்து கொண்டனர்.

மானிப்பாய் பனை, தென். வள அ. கூட். சங்க பொது முகாமையாளர் திரு மா. குமாரசுவாமி வரவேற்புரையையும்; வலிகாமம் கொத்தணி பொது முகாமையாளர் திரு க. சந்திரராசா நன்றி உரையையும் ஆற்றினர்.

### கூட்டுறவு இயக்க ...

இலங்கை கூட்டுறவுமுகாமை நிறுவன உசாத் துணைவர் திரு. சி. கோணேஸ்வரன் நவீன ஆளணிக் கொள்கை தொடர்பான கருத்துக்களையும், சொல்முறைப் பயிற்சியையும் நடத்தினார்.

இவ்வேலைத் தளத்தில் பல்வேறு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்கள், ஆளணி முகாமையாளர்கள் கலந்து கொண்டார்கள்.

### வட-கிழக்கு...

கல்வி அமைச்சின் பதில் செயலாளராகவும் தற்போது நியமனம் பெற்றுள்ளதால், வட பகுதியில் தங்கியிருக்கும் நாட்களில் வடபகுதியில் உள்ள கல்வித் திணைக்களங்களுக்கும் விஜயம்செய்து வடபகுதியின் கல்வித் தேவைகளை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார் செய்திகள்

### சிறந்த சேவை

நானாட்டான் மாவட்டத்தில் இயங்கி வரும், நானாட்டான் பகுதி பல நோ. கூ. சங்கம் மாந்தை வடக்கு, மாந்தை மேற்கு பல நோ. கூ. சங்கங்கள் கொழும்பில் இருந்து நுகர்ச்சிப் பொருட்களை பெற்றுவந்து மக்களுக்கு சிறந்த சேவை ஆற்றிவருகிறது.

### கிளை நிலையங்கள் புனரமைப்பு

மன்னார் பல. நோ. கூ. சங்கம் தனது கிளை விற்பனை நிலையங்களை புனரமைப்புச் செய்து மக்களுக்குத் தேவையான பொருட்களை வழங்கி வருகிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களை விநியோகித்து வரும் சங்கம், இதற்காக வழங்கப்படும் செலவினங்கள் போதாது இருப்பதனால் நிவாரணப் பொருள் விநியோகத்தில் சங்கம் பாரிய நட்டமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்களின் தன்மைகருதி பேரூந்தப்பட்டி மறைபணியிலும் கதிரை வாடகைக்கு விடும் சேவையிலும் சங்கம் ஈடுபட்டு வருகிறது.

### நியமனம்

மன்னார் மாவட்டக் கூட்டுறவுச்சபை புனரமைக்கப்பட்டு அண்மையில் மாந்தை பல நோ. கூ. சங்கத்தில் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் திரு. யோன் கிளமர் பயஸ் சபையின் தற்காலிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டுறவுச் சபை தனது முதல் நடவடிக்கையாக கூட்டுறவுப் பணியாளர் தராதர சாதாரணதர பரீட்சைப் பயிற்சியை நடாத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

### உற்பத்தியின் தரம்...

தியின் தரத்தை நவீன மயப்படுத்தி சர்வதேச ரீதியில் உயர்த்துவதுடன் கூடுதல் தொழில்வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

பனை வெல்லம், கைப் பணிப் பொருட்கள், மதுசார உற்பத்தி, தும்பு உற்பத்தி, பாய் நெசவு உற்பத்தி ஆகியன இங்கு இடம்பெறுகின்றன.

## மண்ணெண்ணை விநியோகம்

"மாகோ" கப்பல்மூலம் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணை குடும்ப அட்டைக்கு 3 லீற்றர் வீதம் பல நோ. கூ. சங்கங்கள்மூலம் வழங்கப்படவுள்ளது.

லீற்றர் 20 ரூபா என்றஅடிப்படையில் உச்ச விலையை அதிகரிக்காது விற்பனை செய்வதற்காக பளை பல நோ. கூ. சங்கம் உட்பட 23 பல நோ. கூ. சங்கங்களுக்கும் 2815 பரல் மண்ணெண்ணை யாழ். செயலகத்தால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### பொருள் விநியோகம்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் குமண கப்பல் மூலம் எடுத்துவந்த உணவுப் பொருட்களையும், காலநடை தீவனங்களையும் தனது அங்கத்துவ சங்கங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

### கூட்டுறவுக் ...

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து 27 பிரதேச செயலர்கள், பிரதிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் கலந்து கொண்டார்கள்.

வடகிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. செ. கணேசநாதன் கூட்டுறவு அ. உ. ஆணையாளர்கள், திரு. எஸ். லிங்கநாதன், திரு. மு. க. முருகையா, திரு. ஆ. தங்கதுரை, இலங்கை கூட்டுறவு முகாமைச்சேவை நிறுவன உசாத்துணைவர் திரு சி. கோணேஸ்வரன், திருமலை மாவட்ட செயலக கணக்காளர் திரு. ஏ. எஸ். யேசுராசா ஆகியோர் இக் கருத்தரங்கில் கருத்துரை வழங்கினார்கள்.

### அமரருக்கு அஞ்சலி

மானிப்பாய் பல நோ. கூ. சங்கத்தின் உட்துறை கணக்காய்வாளராகவும் யாழ். கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரியின் விரிவுரையாளருமாகிய திரு. மு. சுகந்தசீலன் இம்மாதம் 17ம் திகதி கொழும்பில காலமானார்.

கூட்டுறவுத்துறையில் இவர் கடமை ஆற்றிய காலங்களில் அவரது பங்களிப்பு அர்ப்பணிப்புக்கள் சகலரையும் கவர்ந்திருந்தது. இத்தகைய சேவையாளர் ஒருவனைத் இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தவருடன் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை அஞ்சலிசெலுத்திறது.

## அறிவித்தல்

**யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின்**

**6 - வது வருடாந்தப் பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு**

மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டம் 10 - 5 - 95 புதன் கிழமை நடைபெறும் என அங்கத்துவ சங்கங்களுக்கு முன் அறிவித்தலாக அறியத்தந்திருந்தோம்.

எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தால் திட்டமிட்டவாறு 10 - 5 - 95-ம் திகதியில் வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறமாட்டாது என்பதை அறியத்தருகிறோம். பொதுக் கூட்டம் நடைபெறும் திகதியும் நிகழ்ச்சிநிரலும் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

மாவட்டச் செயலாளர்,
யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை.

## விளம்பர அன்பளிப்பு

★ **மானிப்பாய் பல நோ. கூ. சங்கம்**
மானிப்பாய்

★ **தெல்லிப்பழை பல நோ. கூ. சங்கம்**
தெல்லிப்பழை (தற்காலிகம் மானிப்பாய்)

★ **அளவெட்டி - மல்லாகம் பல நோ. கூ. சங்கம் - அளவெட்டி**

★ **யாழ்ப்பாணம் ப. தெ. வ. அ. கூ. சங்கம்**
காங்கேசன்துறை வீதி - யாழ்ப்பாணம்

★ **கோப்பாய் ப. தெ. வ. அ. கூ. சங்கம்**
பருத்தித்துறை வீதி - கோப்பாய்

யா. மா. கூ. சபை அச்சகத்தில் அச்சிட்டு 14, மணிக்கூட்டுவீதி மா. கூ. சபையினரால் சித்திரை மாதம் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org